மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII. | Madras: April 1910. | No-4.
புத்தகம் - கஉ. | சென்னப்பட்டணம்: ஏப்ரல்மீ 1910. | இலக்கம்-4.

முகவுரை.

இந்தியா, இங்கிலாந்து தேசத்து சரித்திரக் கதைகள் நமது மாதர்களுக்கும் பெண்களுக்கும் தெரியவேண்டுமென்ற எண்ணத்துடன் இம்மாதப் பத்திரிகையில் போடீஷியா என்ற வீரத்தன்மையுள்ள ராணியாரைப்பற்றி எழுதியிருக்கிறோம். இனி அடிக்கடி இவ்விதக் கதைகள் நமது பத்திரிகையில் வெளிவரும்.

வீரத்தன்மையுள்ள ராணி.

சுமார் 2,000 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தும், ஸ்காட்லாண்டும் இப்பொழுது நாகரிக மடைந்திருப்பதுபோலிருக்கவில்லை. அக்காலத்தில் அங்கு காடுகள் அதிகமாயிருந்தன. மாடமாளிகைகளுள்ள வீடுகள் கிடையாது. ஆனால் ஜனங்கள் காடுகளில் சிறிய கிராமங்கள் ஏற்படுத்திக்கொண்டு குடிசைகளில் வசித்து வந்தார்கள். இப்பொழுது அத்தேசத்திய ஜனங்கள் ஐக்யமாயிருப்பதுபோல் அக்காலத்திலிருக்கவில்லை. அநேக சாதியார்களாக அவர்களிருந்தார்கள். அவர்கள் குடியானவர்களாயும், இடையர்களாயும், வேடர்களாயுமிருந்தார்கள். ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தலைவன் அல்லது அரசன் இருந்தான், இந்த அரசர்களில் சிலர் மிகச் சிறிய தேசங்களை ஆண்டு வந்தார்கள். அவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டை புரிந்துகொண்டே வந்தார்கள். அவர்களுக்குள் சண்டை வெகு சகஜமாகவு மிருந்தது.

முன் காலத்தில் ப்ரிட்டானியர்கள் கோதுமையைப் பயிர்செய்துகொண்டும், ஆடு மாடுகளை வளர்த்திக்கொண்டும் வந்தார்கள். எவனுக்கு அதிக கோதுமை நிலமும், ஆடு மாடுகளுமிருக்கின்றனவோ அவன்தான் தனவான். அச்சாதியார் இவ்வித நிலங்களையும், ஆடுமாடுகளையும் பெற அடிக்கடி சண்டைசெய்து வந்தார்கள்.

முன் காலத்தில் சண்டை மேற்சொல்லிய வண்ணம் நடந்தது. ரோமாபுரியின் சேனைத்தலைவராகிய பேர்போன ஜூலிஸ் ஸீஸர் பிரான்சு என்று சொல்லப்படும் தேசமாகிய கால் என்றதிலுள்ள கோதுமை நிலங்களை கைவசமாக்கிக்கொள்ள அத்தேசத்தின்மீது படையெடுத்துச் சென்றார். அவர் அவ்விதமே சென்று அவர்களை செயித்துக்கொண்டிருக்கும்பொழுது பிரிட்டானியர்கள் கால்தேசத்து ஜனங்களுக்கு உதவிபுரிவதைக் கண்டார். இவருக்கு கோபமுண்டாயிற்று. உடனே அவர்களைத் தண்டிப்பதற்காக அத்தேசத்தின்மீது படையெடுக்க தீர்மானஞ்செய்து கொண்டார்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 55-வருஷங்களுக்குமுன் ஜூலிஸ் ஸீசர் தமது பரிவாரங்களுடன் அங்குள்ள பெரிய கால்வாயைத் தாண்டினார். கரையில் பிரிட்டானியர்கள் இவரைச் சந்தித்து இவருடன் தைரியமாக யுத்தம் புரிந்தார்கள். அக்காலத்தில் ரோம்தேசத்தார் யுத்தத்தில் கைதேர்ந்தவர்களா யிருந்தமையால் அவர்களுடன் யுத்தம்செய்து அவர்களைத் திரும்பிப்போகும்படி துரத்திவிட்டார்கள். ஆயினும் சீசருக்கு போதுமான ஜனங்களில்லாமையால் அத்தேசத்தை ஜெயிக்காமல் வந்த வழியைப்பார்த்துக் கொண்டு போய்விட்டார்.

அடுத்த வருஷம் திரளாக சேனைகளுடன் மறுபடியும் யுத்தம் புரிந்து இத்தேசத்தைக் கைக்கொள்ள வந்தார். இவர்களுடன் போர்செய்து இவர்களைத் தோற்கடித்து காடுகளுக்குள் சென்று அங்குள்ள தேம்ஸ் என்ற நதியைத்தாண்டி சில அரசர்களுடைய கிராமங்களைக் கொளுத்தி நாசமாக்கிவிட்டார். அவர்கள் இவருக்குப் பயந்து இவரைப்பணிந்து ரோம்தேசத்துக்குக் கப்பம் கட்டி வருவதாகச் சொன்னார்கள். இதைக்கேட்டு சீசர் மிகச் சந்தோஷப்பட்டு தமது தேசத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்.

பின்பு சுமார் 100-வருடம் வரையிலும் ரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்துக்குப் போகவில்லை. இக்காலத்தில் தான் கால் என்றதேசம் அதாவது பிரான்சு, ரோம் இராஜ்யத்திற்கு ஒருபாகமாக சேர்க்கப்பட்டது. எப்படியெனில் இப்பொழுது தென் ஆபிரிக்கா பிரிடிஷ் இராஜ்யத்தின் ஒருபாகமாக யிருப்பதுபோல் தான். அப்பொழுது கால்தேசத்துக்கும் ப்ரிட்டனுக்கும் போக்கு வரவுண்டு. பிரிட்டனுக்கும் ரோமுக்கும் போக்கு வரவுண்டு. இவ்விதம் போக்கு வரவு யிருந்தமையால் வியாபாரம் பலப்பட்டது. வியாபாரம் பலப்படவே கிழக்கே யுள்ள ப்ரிடடானியர்கள் நாகரிக மடைய ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்கள் தேகமுழுவதும் பச்சை குத்திக்கொள்வது வழக்கம். இவ்வழக்கத்தை விட்டுவிட்டார்கள். உடுப்புகளைத் தரிக்கவும் ஆரம்பித்தார்கள்.

ஜூலிஸ்ஸீசர் படையெடுத்த பின் 100-வருஷங்களுக்கு அப்புறம் தான் ரோம்தேசத்தார் ப்ரிட்டனை உண்மையாக ஜயித்தார்கள். ஸிம்பலேன் என்ற ப்ரிடிஷ் அரசன் சிற்றரசர்களி லநேகரை அடக்கி அவர்களைத் தன் வசமாக்கிக்கொண்டு தென் கிழக்கு பாகங்களில் அதிக பலபராக்கிரமமுள்ளவனாக யிருந்தான்.

இவன் இறந்தபொழுது சிற்றரசர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்ய தலைப்பட்டார்கள். அவர்களில் சிலர் தங்களுக்கு உதவிசெய்யும்படி

ரோம்தேசத்து சக்கரவர்த்தியை வேண்டிக்கொண்டார்கள். இவர்கள் இவ்விதம் செய்ததானது ரோமர்கள் இந்த பிரிட்டனை ஜெயிக்க காரணமாயிருந்தது.

கிறிஸ்து பிறந்த 43-வது வருஷத்தில் ரோம்தேசத்து சேனை பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தது. அச்சமயத்தில் இவர்களுக்குள் ஒற்றுமை யென்பதே கிடையாது. ஒருவன் மற்றொருவனை வெறுத்துக்கொண்டிருந்தான். இவ்விதம் இவர்களிருந்தமையால் ரோம்தேசத்து சேனையை யெதிர்க்க சக்தியற்றவர்களாயிருந்தார்கள். வெகு சீக்கிரத்தில் பெரும்பாகத்தை ரோமர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள்.

பிரிட்டன் தேசத்தவர்கள் எதிரிகளோடு தைரியமாய்ச் சண்டை செய்ய ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒரு மிக்க சேர்ந்து யுத்தம் புரிய மனக்குறையாதொன்றுமில்லை. மேலும் அவர்களை நடத்ததக்க யோக்கியதையுள்ள புருஷ சிங்கமுமில்லை. ஆயினும் இந்த இரண்டு குறையும் சிக்கிரம் நீங்கும் காலம் வந்ததென்று சொல்லலாம். வீரத்தன்மையுள்ள ஒரு ராணியார் இவர்களை ஒரு மிக்க சேர்ப்பித்து யுத்தம் செய்யவும் இவர்களை நடத்தினர். அம்மாது சிரோன்மணியார்? அவ்விராணிக்கு இவ்வித எண்ணம் எவ்விதம் உதித்ததென்று சிலர் கேட்கலாம்.

இவ் விராணியின் திவ்விய நாமம் போடீஷியா. இதன் அர்த்தம் ஜெயம் பெற்றவள. இம்மாது பிரிடிஷ்சாதியாருக்கு ராணியாராக யிருந்தாள். அப்பொழுது ரோம் தேசத்தவர்கள் அப் பூமிக்கு எஜமானர்களா யிருந்தார்கள். அவர்கள் பிரிட்டானியர்க ளிடத்தில் கர்ண கடோரமாயும் இரக்க மில்லாதவர்களாயு மிருந்தார்கள். அச்சமயத்தில் போடீஷியா தமது உயிருக்குயிரான கணவரை யிழந்து விதந்துவாய் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தாள். இவளுடைய கணவர் தமது ஆஸ்தியில் சரி பாதி ரோம் சக்கரவர்த்திக்கும், மீதி யுள்ள பாதி தமது இரு குமாரத்திகளுக்கும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். தமது மனைவியையும், குழந்தை களையும், இவர் இறந்தபின், ரோமர் காப்பாற்றுவார்களென்ற நம்பிக்கையுடன் இவ்விதம் செய்தார். இதற்கு நேர் விரோதமாக பேராசைகொண்ட ரோமர்கள் அரசனுடைய ஆஸ்தி முழுவதையும் கைவச மாக்கிக் கொண்டார்கள். ஐயோ! கணவனை பலிகொடுத்த மனைவியும் தகப்பனை இழந்த குழந்தைகளும் எவ்விதமாய் ஜீவிப்பார்கள்? அவர்கள் மனது அச்சமயத்தில் எப்படி யிருந்திருக்கும்?

இத்துடன் நின்று திருப்தி யடையாமல் யாதொரு தப்பும் செய்யாதவும், நிர்தோஷியாயுமுள்ள ராணியைத் தடியால் அடித்தும், அவளுடைய இரு இரத்தினங்க ளாகிய குமாரத்திகளை அதிக வெட்கக் கேடாயும் நடத்தினர்கள். இவர்கள் இப்படி செய்ததானது பொடீஷியாவுக்கு அதிக கோபத்தை யுண்டாக்கியது. இவள் தமது ஜனங்களை யெல்லாம் ஒருமிக்க அழைத்து நெருப்பு பொரிபறக்கும்படி அவர்களிடத்தில் பேசினள். "அவ்வளவு குரூரமாக என்னையும் என் அருமையான புத்திரிகளையும் அவர்கள் நடத்தியதை கண்ணுற்றீர்களா? உங்களுக்குச்சிறிதும் என்னிடத்தில் அன்பு கிடையாதா? நீங்கள் ஒன்றாகச் சேர்ந்து அவர்களை ஜெயிக்கவேண்டும், சுவாதீனம் ஆஸ்தியை விட அதிகமேலானது. அடிமைத் தனமோ மரணத்தை

விட அதிக இழிவானது. ரோம் தேசத் தவர்கள் நம்மை பிச்சைக் காரர்க ளாகவும் அடிமைகளாகவும் செய்து வருகிறார்கள். என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள். இத்தேசத்துக்கு வெளியே இத் திருடர்களைத் துரத்தி விடு வோம். இவர்களுக்கு கீழ்படிவதைவிட நாம் உயிரைவிடுவது மேலானது" என்று அவர்கள் மனம் ஒன்று சேரும்படி கெட்டியாகச் சொன்னாள்.

உடனே அக்கூட்டத்தில் ஒவ்வொருவருடைய முகத்திலும் கோபக் குறி தென்பட்டது. அவர்கள் தங்கள் கத்தியை எடுத்து கேடயத்தில் கோபா வேசத்துடன் அடித்து தங்கள் ராணிக்காகவும், தேசத்திற்காகவும் யுத்தம் செய்து மடிவோம என்று சபதம்செய்து கொண்டார்கள். உடனே பிரிட் டானியர்க ளெல்லாம் ஒரேமனத்துடன் யுத்தம்புரிய புறப்பட்டார்கள். ரோம் தேசத்தார் பூண்டை அறுக்க ஆவலாயிருந்தார்கள். சமயம் வாய்க்க வில்லை. இப்பொழுதுதான் தக்க சமயம் நேர்ந்தது. அவர்களும் ஒற்றுமையா யிருக்க மனங்கொண்டார்கள். இவ்வேளையில் ரோம் தேசத்து சேனாதிபதி பிரிட்டனிலில்லை. இவர்வர சிலவாரம் செல்லும் என்ற சங்கதி பிரிட்டானி யர்களுக்குத் தெரியவந்தது. உடனே இவர்கள் ரோம் தேசத்து ஜனங்க ளும் சொற்ப சேனைகளுமிருந்த கூடாரங்களுக்குச் சென்று அங்குள்ள மனி தர், ஸ்திரீகள், குழந்தைகள் முதலியவர்களை சிறைபடுத்தினார்கள். உடனே ரோமாபுரியின் ஆட்சி குலைந்ததென்று எண்ணும்படி தோன்றிற்று. இவ் விதம் இங்கிலாந்தில் கலகமுண்டாயிருப்பதை ரோம் தேசத்து சேனாதிபதி கேள்வியுற்று உடனே சேனைகளைத் திரட்டிக்கொண்டு லண்டன்மா நகரத் திற்கு விரைந்துசென்றான். 20,000 பிரிட்டானியர்களை எதிர்க்க இவரிடத் தில் 10,000 மனிதர்கள் தானிருந்தார்கள். ரோமர்கள் பிரிட்டானியரைவிட யுத்த பயிற்சியில் தேர்ந்தவர்கள். பிரிட்டானியருடைய சேனைத்தலைவரோ வயது சென்றவர். ஆகையால் அவர்கள் எளிதில் தோல்வி யடைந்து ஓடத் தலைப்பட்டார்கள்.

போடீஷியா எண்ணியவை யெல்லாம் வீணாயின. கடைசியாக தான் விரோதிகளின் கையி லகப்படா வண்ணமிருக்க தீர்மானம் செய்துகொண் டாள். இதை நிறைவேற்றும் பொருட்டு விஷத்தையுண்டு சடுதியில் உயிர் துறந்தாள். தமதுபுத்திரிகளுக்கும் விஷத்தைக்கொடுத்ததாகச் சிலர்சொல்லு கிறார்கள்.

பரிதாபமான வீரத்தன்மையுள்ள ராணியார் வீணாக யுத்தம் புரிந்து இறந்துபோகவில்லை. இவ்விதம் இவர்கள்யுத்தம் செய்ய கிளம்பியது ரோமர் களுக்கு நற்புத்தி புகட்டிய தென்று சொல்லலாம். பிரிட்டானியர்களை இவர் குரூரமாக நடத்தியதால் அவர்கள் இவ்விதம் செய்ய நேர்ந்ததென்று தெரியலாயிற்று. பொடீஷியா இறந்தபின் பிரிட்டனுக்கு ஒரு புதிய கவர் னரை ரோமர்கள் அனுப்பினார்கள். அவர் பிரிட்டானியர்களை அதிக பக்ஷ மாக நடத்திவந்தார்.

இச்சரித்திரத்தால் முன்காலத்தில் நாகரீக மின்மையால் ஸ்திரீகளை அவமரியாதை யாகவும், குரூரமாகவும் நடத்தி வந்தார்களென்று அறிகி றோம். இப்பொழுது ஆங்கிலேயர்கள் நாகரிக முற்றிருப்பதால் தங்கள் ஸ்திரீகளை மரியாதையாகவும் கௌரவமாகவும் நடத்தி வருகிறார்கள். இத

ளுல்தான் அவர்கள் உன்னத ஸ்திதியிலிருக்கிறார்கள். இதற்கு சார்பாக மனுஸ் மிருதியில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

"எந்த வீட்டில் ஸ்திரீகள் விசனமாயிருக்கிறார்களோ அந்த வீட்டில் லக்ஷ்மி வாசம் செய்யமாட்டாள்".

இச்சரிதையை கௌபர் என்னும் ஆங்கிலக்கவி வெகு அற்புதமான நடையில் செய்யுளில் எழுதியிருக்கிறார். அவற்றை இன்னொரு சமயம் தமிழில் அகவலாக மொழிபெயர்த்து பிரசுரிப்போம்.

சதாரம்.

ஜலம் கொண்டுபோகிறதற்கு வேறு ஒருவழியுமில்லை. (வஸ்திரத்தின் ஒருபாகத்தை நனைத்துக்கொண்டுவேகமாய் ஓடிவந்து புஷ்பாங்கதனிருக்கிற இடத்தையடைந்தாள்). பிராணேசா, ஜலம் கொண்டுவந்துவிட்டேன், சற்று வாயைத் திறவுங்கள், ஜலத்தைப்பிழிகிறேன், சற்று வாயைத் திறவுங்களேன், வாயைத்திறக்கவில்லையே. வாயைத்திறக்கிறதற்கும் ஒருஆலோஜனை செய்வோம். தெய்வமே, என்னை எவ்விதமெல்லாம் கஷ்டப்படுத்துகிறீர். (கையைக்கொண்டு வாயைப்பலவந்தப்படுத்தித் திறக்கப்பார்க்கிறாள்) அய்யோ! வாயைத்திறக்க முடியவில்லையே, இனியென்ன செய்கிறது? வேறு ஒரு உபாயத்தை யெடுக்கிறேன் (தன் கழுத்திலிருந்த பலமாயும் கனமில்லாததாகவுமுள்ள ஒரு சிறிய ஆபரணத்தை யெடுத்து பற்களுக்கிடையில் கொடுத்து மெதுவாக வாயைத்திறந்தாள்). தெய்வானுகூலத்தால் வாயைத் திறந்துவிட்டேன்; இந்த ஜலத்தை வாயில் பிழிகிறேன் (பிழிகிறாள்). என் பிராணநாதா, தாகசாந்தியாய் விட்டதா, க்ஷீணம் தீர்ந்ததா? சீக்கிரம் கண்ணைத்திறந்து என்னிடத்தில் ஒருவார்த்தையாவது பேசுங்கள். அய்யோ பதிலில்லையே, என்ன செய்வேன்? சுவாசமும் சரியானபடி வரவில்லையே, பரிதவிக்கிறேனே; தெய்வமே, என்னிடத்தில் இரங்கக்கூடாதா, என் நாதனது உயிர்தானிருக்கின்றதோ அல்லது அவரைவிட்டகன்றதோ. அய்யோ, என்னசெய்வேன் (கதறி, கோவென்றழுகின்றனள்) தெய்வமே, என்பேரில் இரங்கி, இவருக்கு ஜீவனைக்கொடுக்கக்கூடாதா. பிராணநாதா, தங்களுடைய முகத்தின் காந்தியெல்லாம் மாறிவிட்டதே. யான் இனி யெவ்விதம் காலங்கழிப்பேன்? தற்கொலைசெய்து உயிரைவிடுவோமென்றால், சாஸ்திரங்கள் அதை விரோதிக்கின்றன. இக்கானகத்திலேயே அங்குமிங்கும் திரிந்து மிருகங்களுக்கு இரையாகிறேன். பிராண நாதா, நாதா.

"நிறையோசைபெற்ற பறையோசையற்று நிரையாய் நிறைந்தகழுகின்
சிறையோதயுற்ற செடியூடிறக்க விதியாரிழைத்த செயலோ"

"வானின்றிகழ்ந்து சொரிகின்ற தாமரைமழைபோல வீழவிழிநீர்
ஊனின்றி மேனியுதிரங்களை சிந்த வுயிரின்றி வெம்புதழலின்

மேனின்று வெந்தளிர்போ லுயங்கி விதியாரைநொந்து தனியே
யானின்றிரங்கவே னென்பதில்லை யிதுவோ நீதி", துரையே.

நாதா, ஏன் அழுகிறா யென்று ஒருவார்த்தையாவது சொல்லக் கூடாதா. அய்யோ, அய்யோ, என்ன செய்வேன், கதியில்லையே (கதறிக்கொண்டு பிரேதம்போல் புஷ்பாங்கதன் மேல்விழுகிறாள்).

புஷ்பாங்கதன்:—(சிறிதுநேரத்திற்குள் ஜலம் அருந்தியதால் மூர்ச்சை தெளிந்து சதாரத்தைப்பார்த்து) சதாரம் என் கண்ணே, என்ன பிரேதம் போலிருக்கிறாய், உனக்கு என்ன நேர்ந்தது; சதாரம், சதாரம், எழுந்திரு (எழுந்து தேம்பி அழுகிறாள்). ஏன்தேம்பியழுகிறாய், கண்ணீர் ஆறாகப் பெருகியிருக்கிறதே; என்ன நடந்தது. க்ஷீணத்தால் சற்று நித்திரைசெய்து கொண்டிருக்கும்போது, உன்னை, துஷ்டர்கள் யாராவது இம் சித்தார்களா அல்லது துஷ்டமிருகங்கள் வந்து உன்னைத் தொந்தரவுசெய்தனவா? பிரிய சகி, அழாதே, அழாதே, காரணத்தைச் சீக்கிரம் சொல்.

சதாரம்:—நாதா, சற்றுமுன் யான் அடைந்த வருத்தத்தைப்பற்றி என்னவென்று சொல்லுவேன். தங்களை யிந்தஜென்மத்தில் இழந்துவிட்டேன், எனக்குவேறே கதியில்லையே யென்று, ஆறாத்துயரடைந்து அழுது சோர்ந்து தங்கள் மீதுவிழுந்து விட்டதுதான் தெரியும்.

புஷ்பாங்கதன்:—என்ன நடந்தது; நீ அவ்விதம் நினைக்கவேண்டிய காரணம் என்ன?

சதாரம்:—பிராணநாதா, தாங்கள் க்ஷீணத்தால் கீழேவிழுந்து, தாகத்துக்கு கொஞ்சம் ஜலம் வேணுமென்று கேட்டீர்கள்.

புஷ்பாங்கதன்:—ஆம், கேட்டேன்.

சதாரம்:—கேட்டவுடன், தங்களை யிங்கேவிட்டுவிட்டு, தண்ணீர் இருக்கிற இடத்தைத்தேடி, அதைக்கொணர்ந்து, தங்களுடைய வாயைத்திறக்கச் சொன்னவுடன் திறக்காததினால், யான் பலவந்தமாய் வாயைத்திறந்து ஜலத்தைப்பிழிந்து, தங்களைப் பலமுறையும் அழைத்தும் ஏனென்று கேட்கவில்லை. தங்களுயிருக்கே அபாயம்வந்து விட்டதென்று நினைத்து பிரலாபித்தேன்.

புஷ்பாங்கதன்:—நீ யொரு பைத்தியகாரிதான். சிறிதுநேரம் உறங்கினதற்காக இவ்வளவுதூரம் கூத்து இழுத்துவிட்டனையே. எனக்காக தண்ணீர் கொண்டுவர, தனியாக இதைவிட்டுப் போயினையா? நீ, சதாரமல்லவோ; உன்பெயருக்கேற்ற செய்கைகளைச் செய்தாய். நல்லது, அதிகநாழிகை நடந்துவந்ததினால் வெகு க்ஷீணத்தை யடைந்திருப்பாய். உனக்குப் பசியில்லையா, எனக்கும் பசிக்கிறது ஏதாவது தின்பண்டங்களிருந்தால் சாப்பிடலாம். இக்காட்டில் தின்பண்டங்கள் ஏது; யாரிடத்தில் போய்க்கேட்கிறது. கேட்போமென்றால் இக்கானகத்தில் துஷ்டமிருகங்களைத்தான் கேட்கவேணும்.

சதாரம்:—பிராணநாதா, இதைப்பற்றிதாங்கள்விசனப்படவேண்டாம். என் அன்னையிடத்தில் யான் விடைகேட்கும்போது கொஞ்சம்தின்பண்டங்களும், நாணயங்களும் தந்தனள். இதோ இருக்கின்றன; இந்ததின்பண்டங்களைப் புசித்து நம்முடைய பசியைத் தீர்த்துக்கொண்டு மேல்நடக்கவேண்டியதை ஆலோசிக்கலாம்.

புஷ்பாங்கதன்:—பெற்றவளுக்கே தெரியும் பிள்ளையினருமை. அதினாலல்லவோ உனது அன்னை இவைகளைத்தந்தாள். இதைப்புசித்து நமதுபசியையாற்றிக்கொண்டு நீயுரைத்தபடி மேல் நடக்கவேண்டியதை ஆலோசிக்கலாம் (இருவரும் தின்பண்டங்களைச் சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டவுடன் காட்டுவழியாகப் போகின்றனர்).

அங்கம் 3. களம் 1.

இடம்:—மாயாபுரியைச் சார்ந்த ஓர்வனம்.

காலம்:—காலை.

புஷ்பாங்கதனும் சதாரமும் பிரவேசித்தல்.

சதாரம்:—என் பிராணநாதா, இன்றைக்கு என்ன ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்.

“அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும்முகம்”

என்று திருவள்ளுவநாயனார் அருளியபடி, தங்களுடைய முகத்தைப் பார்க்கும்போது ஒருநாளுமில்லாத வியாகூலத்தைத் தாங்கள் இன்று அடைந்திருக்கிறதாகத் தெரிகிறது. தங்களுக்கு என்னவியாகூலம் இப்பொழுது வந்தது, தெரிவியுங்கள்.

புஷ்பாங்கதன்:—சதாரம், யான் இது காறும் வருத்தந்தெரியாமல் ஒரு செல்வப்பிள்ளையைப்போலக் காலங்கழித்துக்கொண்டுவந்தேன். ஆனால் இன்றையதினம் எனக்கு ஏற்பட்ட கவலையை யெவ்விதம் தீர்க்கலாமென்று ஆலோசித்துப்பார்த்தும் எனக்கொன்றும் தெரியவில்லை.

சதாரம்:—தயவுசெய்து, என்னகவலை தங்களுக்கேற்பட்டதென்று சொல்லுங்கள். என்னால் ஒரு உபாயம் சொல்லமுடியுமானால் சொல்லுகிறேன்.

புஷ்பாங்கதன்:—என்பிரிய சகி, நாம் நமதுதேசத்தைவிட்டுவந்து சில தினங்களாக ஊர் ஊராய்ப்போய் உனது அன்னைகொடுத்த திரவியத்தைக் கொண்டும் உனது நகைகளைவிற்றும் நம்முடைய காலத்தை ஒருவிதம் கழித்துக்கொண்டுவந்தோம். உன்னிடத்திலிருந்த கடைசி நகையை விற்று நேற்றையதினம் நமக்குவேண்டிய சாமான்களை வாங்கித்தயார்செய்து உண்டு, இன்றைய தினத்திற்கும் வேண்டியவற்றையும் வாங்கிவிட்டோம். சதாரம் உன்தயவினால் இது காறும் காலத்தைக்கழித்தோம். நாளையதினம் என்ன

செய்கிறது தெரியவில்லை. யாரிடத்திலாவது யாசிப்போமென்றாலும் எவ்விதம் யாசிக்கிறதென்று தெரியவில்லை. அதினால்தான் அதிகமாய் வருந்துகிறேன்.

சதாரம்:—என் நாதா, என்னசெய்கிறது; வந்தவர்களுக்கெல்லாம், இரண்டாவது கர்ணன் என்று யாவரும் புகழும்படியாக, இருகைகளாலும் ஏராளமான திரவியத்தைக் கொடுத்ததுபோக, இப்பொழுது யாசிக்கும்படியாக நேரிட்டதே. நம்முடையவிதியைத்தான் நொந்துகொள்ளவேணும். நாதா, தாங்கள் யாசகத்துக்குப் போகக்கூடாது. வேறே உபாயம் எடுப்போம்.

புஷ்பாங்கதன்:—சதாரம், நல்லது, உன் அபிப்பிராயத்திற்கு இணங்கினேன். ராஜவம்சத்தில் பிறந்து விட்டு யாசிப்பது குறைச்சல் தான்; வேறே வழியைத் தேடுவோம். கூலி வேலைசெய்து பிழைப்போமென்றால் அதுவுந்தெரியாதே. நாம் இவ்விதமான கதியை யடைவோமென்று முன்னே தெரிந்திருந்தால், நான் கல்வி கற்றதோடு இத்தொழில்களைச் செய்யவும் கற்றிருப்பேன். நம்முடைய கதி யிவ்விதமாய்விட்டதே. யுத்தஞ்செய்வதிலும், தானதருமங்கள் செய்வதிலும் நான் சமர்த்தனானேன். அவற்றையுபயோகிக்கிறதற்கு நற்காலம் வராமல் இழிவான தொழில்களைச்செய்ய நேரிட்டது.

சதாரம்:—நீங்கள் அதிக வருத்தமடையாமல் சம்பாதிக்கும்படியான ஓர் உபாயமிருக்கிறது. நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். நான் ஒரு வைசியகுலத்திற் பிறந்தவள்; என் பிதாவுக்கு வஸ்திரங்கள் நெய்கிற தொழில்; அவர் வஸ்திரங்கள் நெய்துகொண்டிருக்கும்போதெல்லாம், யானருகில் நின்று அதைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம், அந்தத்தொழில் எனக்கு நன்றாகத்தெரியும்.

புஷ்பாங்கதன்:—நல்லது, உனக்கு அந்தத்தொழில் நன்றாகத்தெரிந்தால், அதை வைத்து இப்பொழுது என்ன செய்கிறது.

சதாரம்:—நான் சொல்வதைக் கேளுங்கள். தாங்கள் எவ்விடத்திலாவது சென்று கொஞ்சம் பட்டு வாங்கிக்கொண்டு வந்தால், அதை வைத்துக் கொண்டு ஒரு நல்ல சவுக்கம் செய்து தருகிறேன். அதைத் தாங்கள் எவ்விடத்திலாவது விற்று திரவியங்கொண்டு வந்தால், நமது காலத்தை ஒருவிதமாய்க் கழிக்கலாம். அய்யோ, என்ன கடினமான இருதயம். ராஜவம்சத்தில் பிறந்த தங்களை என்ன வேலைசெய்யச் சொல்லுகிறேன். வேறே கதியில்லையே, என்ன செய்வேன்.

புஷ்பாங்கதன்:—நீ வெகு சாமர்த்தியமுள்ளவள், அதிக புத்திசாலி; புஷபாங்கதனைக் கலியாணஞ் செய்துகொண்டு, இராஜ்ஜியத்தை யிழந்து கானகம் போய்த் திண்டாடுகிறபோது, எவ்விதம் காலங் கழிக்கிறதென்று கேட்கிற சமயத்தில், உனக்கு இந்தத்தொழில் தெரியும் என்று சொல்லுகிறதற்குத் தான் இதைப்படித்தனையோ. இத்தொழில் நீ படித்ததினால் தான் நமக்கு இக்கஷ்டகாலம் வந்ததோ அறியேன். நல்லது, நான் என்ன செய்யவேணும் சொல்.

சதாரம்:—என் நாதா, அவ்விதமல்ல. நான் மற்றக் கல்விகளை யெல்லாம் கற்றதுபோல, என்னுடைய ஜாதித்தொழிலைக் கற்றுக்கொண்டேன். தாங்கள் சொல்லுகிறபடி நான் இத்தொழிலைக் கற்றிராமற்போனால் நமக்கு இக்கஷ்டகாலம் சம்பவித்திராதென்று எவ்விதம் சொல்லலாம். நாம் அனுபவிக்க வேணுமென்று ஏற்பட்டிருப்பதெல்லாம் நடந்தல்லவோ தீரும். நான் இதைக்கற்றுக்கொண்டதினால் நாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற இச்சமயத்தில் அது உபகாரமாயிருக்கிறது. இனி நடக்கவேண்டியதைச் சொல்லுகிறேன், செவிகொடுத்துக் கேளுங்கள். நான் கொண்டு வந்த திரவியத்தில் எப்பொழுதாவது ஆவசியப்படுமென்று நினைத்து கொஞ்சம் திரவியம் வைத்திருக்கிறேன். நான் முன் சொன்னபிரகாரம் அதை யெடுத்துக்கொண்டுபோய் நல்ல பட்டு வாங்கி வாருங்கள். இக்காட்டில் அகப்படக்கூடிய சிறு கம்புகளைக்கொண்டு ஒரு நல்ல சவுக்கம் செய்துதருகிறேன். அதை விற்றுக்காலங் கழிக்கலாம். (திரவியத்தைக் கொடுக்கிறாள்).

புஷ்பாங்கதன்:—நீ சொன்ன உபாயத்திற்கு யான் உன்னை மெச்சினேன். இந்தப் பணத்தைக்கொண்டு, பக்கத்தில் ஏதாவது ஊரிருந்தால் அவ்விடத்திற் சென்று நீ அபிப்பிராயப்பட்டபடி பட்டு வாங்கிக்கொண்டு வருகிறேன். நான் சீக்கிரம் வந்துவிடுவேன், அதுவரையில்நீ இந்தமரத்தடியிலிரு, சதாரம், உன்னைவிட்டு யெவ்விதம் பிரிந்துபோகிறது; உன்னை யெவ்விதம் இக்காட்டில் தனிமையாக விட்டுவிட்டுப் போவேன்; சற்றுநேரம் நித்திரை செய்வதற்குள் என்ன பாடு பட்டாய்? துஷ்ட மிருகங்கள் உன்னை யுபத்திரவஞ் செய்யாதா? உன்னை யிவ்விடம் விட்டு விட்டுப் போக மன மில்லையே!

சதாரம்:— நாதா, தைரியமாய் என்னை யிவ்விடத்தில் விட்டு விட்டு, சீக்கிரம் போய் வாருங்கள். திரௌபதி யானவள் எவ்விதம் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று சொல்லி தனக்கு வந்த இடையூறுகளை நீக்கிக் கொண்டனளோ, அதேமாதிரியாக, எனக்குத் தெய்வமா யிருக்கப்பட்ட தங்களுடைய நாமத்தை, தாங்கள் திரும்பிவருமளவும் உச்சரித்துக்கொண்டு எனது காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறேன். தங்களுடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தால் ஒரு துஷ்டமிருகமும் என்னை யணுகாது. காலதாமதம்வேண்டாம், சீக்கிரம்போய்வாருங்கள்.

புஷ்பாங்கதன் :—பிரியசகி, யான்போய்வருகிறேன். மிருகங்களைக் கண்டு பயந்துபோகாதே. நான் திரும்பி வருகிறவரையில் இந்த இடத்தை விட்டு ஒரு இடமும் செல்லாதே. சீக்கிரம் விடைதா; யான்போய் வருகிறேன்.

சதாரம்:—நாதா, தாங்கள் ஆக்ஞாபித்தபடி நான் இதைவிட்டகலமாட்டேன். சீக்கிரம் போய்வாருங்கள்.

புஷ்பாங்கதன்:—சாவதானமாயிரு. நான் போய்வருகிறேன். அதிக சீக்கிரத்தில் வந்துவிடுவேன். (போகிறான்)

சதாரம்:—(சிறிது நேரங்கழிந்தபின்) என் நாதன் இதைவிட்டுப்போய் எவ்வளவுநேரமாய்விட்டது, இன்னும் வரக்காணவில்லையே. எப்பொழுதும்

ராஜகாரியங்களிலே யிருக்கப்பட்ட என் நாதன், ஒன்றையும் விலைக்கு வாங்கி யறியார். பட்டுவாங்கவேண்டியவகையறியாது தயங்கிநிற்கின்றனரோ, அறியேன் அய்யோ என்னிமித்தமாக எவ்வளவு கஷ்டங்களை அவர் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இதைவிட்டுச் சற்று தூரம்போய், வருகின்றனரா வென்று பார்ப்போமென்றால், இதைவிட்டு ஒரு இடமும்போகக்கூடாதென்று ஆக்ஞாபித்திருக்கிறார். அதோ ஒரு ஆள் தூரத்தில் வருகிறதாகத் தெரிகிறது; யார் தெரியவில்லையே. கிட்டவரவரப் பார்த்துக்கொள்வோம். என்பிராணநாதரல்லவோ வருகின்றனர். நான் எதிர்கொண்டுபோகிறேன்; பட்டு வாங்கினரோ என்னமோ அறியேன் (எதிர்கொண்டுபோகிறாள்). நாதா, பட்டுவாங்கினீர்களா? காட்டுங்கள், பார்ப்போம். (பட்டை சதாரம்கையில் கொடுக்கிறான்). நாதா, நீங்கள் வாங்கினபட்டு நல்லபட்டு. என்மனதிற் கிசைந்தாற் போலிருக்கிறது. நீங்கள் போய்த் திரும்பிவருகிறதற்குள் சிறு கம்புகள் பொறுக்கி அவைகளைக்கொண்டு வஸ்திரம் நெய்கிறதற்குத் தகுந்த ஒருநெசவுதறி தயார் செய்துவிட்டேன். இதோபாருங்கள், சிறிதுநேரத்திற்குள் ஒரு சவுக்கம் செய்துதருகிறேன், (நெய்கிறாள்)

புஷ்பாங்கதன் :—(சிறிதுநேரம் கழிந்தபின்) சதாரம், நீ செய்கிற வேலையைப் பார்க்கிறபோது அதிகவினோதமாயிருக்கிறது. நான் சற்றுமுன் சொன்னதுபோல், நாம் பரிதவிக்கும் சமயத்தில் உபயோகிக்கும்படியாக இந்தத்தொழிலை நன்றாய்க் கற்றுக்கொண்டாய். க்ஷணநேரத்தில் செய்து முடித்துவிடுவாய்போல் தோன்றுகிறதே.

சதாரம்:—ஒரு நொடிப்பொழுதில் தந்துவிடுகிறேன். இந்த ஓரத்தில் ஒருகரைபோடவேண்டியது மாத்திரம் பாக்கியிருக்கிறது. அதையும்இதோ தீர்த்துவிட்டேன். நாதா, இதோ பாருங்கள், சவுக்கம் தீர்ந்தாய்விட்டது. இதை யெடுத்துக்கொள்ளுங்கள். (கொடுக்கிறாள்)

புஷ்பாங்கதன் :—(சவுக்கத்தை வாங்கிக்கொண்டு) சதாரம், இதை யென்னசெய்யவேணும் சொல்.

சதாரம்:—(துக்கப்பட்டு அழுதுகொண்டு) நாதா, என்ன செய்கிறது. இதை நினைக்கிறபொழுது ஒருவார்த்தைகூடப்பேச நாவெழும்பவில்லை-கண்ணீரோ ஆறாகப்பெருகுகிறது; தெய்வமே, இக்கதியை யடைந்தேனே.

புஷ்பாங்கதன்:—பிரியசகி, ஏன்துக்கித்து அழுகிறாய் சொல்.

சதாரம்:—நாதா, இந்தச்சவுக்கத்தை விற்று நம்முடைய காலத்தைக் கழிக்கவேணுமென்று முன்னுரைத்தேன். என்ன கடினமான இருதயம். தங்களைஎன்னதொழில்களை யெல்லாம் செய்யச்சொல்லவேண்டியிருக்கிறது. அடுத்த ஊரில்சென்று இதைவிற்று திரவியம் வாங்கிக்கொண்டுவந்தால், அதைவைத்து கொஞ்சம் தினங்கள் கழிக்கலாம். தங்களை வியாபாரியாக வேணுமென்று சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீ தன்பர்த்தாவுக்குச் செய்ய வேண்டிய மரியாதை நன்றாயிருக்கிறது. என் பிராணநாதா நான் என்ன செய்தேன், வேறுகதி யில்லையே.

புஷ்பாங்கதன்:—(அழுது கண்ணீருடன்) என்பிரியசகி, இந்தச் சவுக்கத்தை நீ எனக்குச் சந்தோஷமாகத்தந்து, நானே அதை உபயோகித்தால்

எவ்வளவுபாக்கிய சாலியாயிருப்பேன். உன்னால் செய்யப்பட்ட இந்தச்ச வுக்கம் வெகுநன்றாயிருக்கின்றது. அதை நானல்லவோ உபயோகித்து சந்தோஷப்படவேணும், உன்னையும் சந்தோஷப்படுத்தவேணும்; என்னசெய்கிறது; அதை யனுபவிக்க நான் கொடுத்துவைக்கவில்லை. நல்லது நீ யுரைத்த பிரகாரம் நான் அடுத்த ஊரில் சென்று இதை விற்றுவருகிறேன்.

சதாரம்:—தாங்கள் இராஜ்ஜியத்தில் சந்தோஷமாயிருந்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டிருக்கவும், நான் இதைத்தங்களுக்கு சம்மான மாகத்தரவும், தாங்கள் இதை யன்புடன் அங்கீகரிக்கவும் ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். இதைத்தாங்களல்லவோ உபயோகிக்கவேணும். அந்தமகாபாவி செய்த அநியாயத்தால் இதற்கு ஒன்று மிடையில்லாமற் போய்விட்டதே.

புஷ்பாங்கதன்:—நான்தான் அதைப்பற்றி என்னமோ தெரியாமல் சொல்லிவிட்டேன். நீயும் அதைப்பற்றித் துக்கிக்கிறாயே. நான் இராஜ்ஜியத்திலிருந்தால் நீ இச்சவுக்கத்தைச் செய்யவேண்டி நேரிடுமா. நாம் இப்பொழுது கஷ்டப்படுவதாலல்லவோ நீ அந்தவேலை தெரியுமென்றுரைத்தாய். நாம இராஜ்ஜியத்திலிருந்து அரசாண்டுகொண்டுவந்தால், எக்காரணத்தைக் கைக்கொண்டு இதைச்செய்வாய். ஆகையால் நாம் இதைப்பற்றித் துக்கப் படுவதில் பிரயோசனமேயில்லை. இனி, மேல்நடக்கவேண்டியதை ஆலோஜிக்கலாம்.

சதாரம்:—ஆனால், நான் சொல்லியபடி இதைவிற்று வாருங்கள். நான் சொல்வதைக்கவனமாய்க் கேளுங்கள். இதைச்சாதாரணமனிதர்களிடத்தில் விலைக்குக்கொடுத்தால் நமக்குத் தகுந்த திரவியம் கிடையாது. ஆகையால் இதை, தங்களைப்போலொத்த அரசர்களிடத்திலோ,பெரியதனவான்களிடத்திலோ விலைக்குக்கொடுக்கவேணும் அவர்கள் இதைக்கண்டவுடன் தகுந்த விலைதருவார்கள். அதைப்பெற்றுக்கொண்டு சீக்கிரம் வாருங்கள். ஆனால் ஒரு விஷயம்மாத்திரம் ஞாபகத்தில் இருக்கவேணும். அதாவது என்பெயரைத் தாங்கள் ஒருவருக்கும் வெளியிடக்கூடாது. என்ன நேர்ந்தாலும் இதைமாத்திரம்மறந்துபோகாமல்சீக்கிரம் இதைவிற்றுக்கொண்டுவாருங்கள்.

புஷ்பாங்கன்:—சதாரம், நீ யிவைகளை என்னிடத்திலுரைக்கும்பொழுது எனது இடது புருவங்களும் கண்களும் துடிக்கின்றன. நமக்கு என்ன கெடுதல்வரப்போகின்றதோதெரியவில்லை.ராஜாவிடத்திலோ, அல்லதுபெரிய தனவான்களிடத்திலோ விலைக்குக் கொடுக்கவேணுமென்றும், உன்பெயரை ஒருவருக்கும் வெளியிடக் கூடாதென்று முரைத்தவுடன் இந்த அபசகுனங்கள் நேரிட்டன. என்ன சம்பவிக்குமோ அறியேன்.

"மங்கைகைகேசி சொற்கேட்டு மன்னர்புகழ்தசரதனு மரணமானான்
செங்கமலச் சீதைசொல்லை சீராமன்கேட்டவுடன் சென்றான் மான்பின்
தங்கையவள் சொற்கேட்ட ராவணனுங்கிளையோடு தானுமாண்டான்
நங்கையர்சொற் கேட்பதெல்லாங் கேடுவரும்பேருலகோர் நகைப்பர்தாமே"

என்று சொல்லியிருக்கிறார் கவி. அதே மாதிரியாக, நீ யிவைகளை யென்னிடத்தி லுரைத்தவுடன் அப சகுனங்கள் நேரிட்டன. மேற்சொல்லிய தசரத

னும், ஸ்ரீ ராமபிரானும், ராவணனும் அடைந்த கதியைப்போல நமக்கு ஒன்றும் வராமலிருக்க வேணுமே. பகவான் இருக்கிருர்; அவர் தலையில் பாரத்தை யெல்லாம் போட்டுவிட்டுச் செல்லுகிறேன்.

சதாரம்:—என்ன சொல்லு கிறீர்கள். நாம் இப்போது அனுபவிக்கிற துன்பங்களைக்காட்டிலும் நாம் அனுபவிக்கவேண்டியது என்ன இருக்கிறது; ஆகையால் நமது ஆலோஜனையின்படி இதை விற்றுவாருங்கள்.

புஷ்பாங்கதன்:—இதை விற்றுக்கொண்டுவரும்படியாக உரைத்தனை. நான் திரும்பி வருமளவும் உன்னை யெங்கு விட்டு விட்டுப் போகிறது?

சதாரம்:—நானும் தங்கள் கூடவே வருகிறேன்.

புஷ்பாங்கதன்:—நீஒருபைத்தியக்காரி; ஏனெனில், அரசர்களிடத்திலோ அல்லது பெரிய தனவான்களிடத்திலோ இதை விற்கும்படியாக உரைத்தாய். அவர்களிடத்தில் உன்னையு மழைத்துக்கொண்டு போகிறது நன்ருயிருக்குமா?

சதாரம்:—நாதா தாங்கள் சொல்வதை நன்ருயறிந்து கொண்டேன். நான் இவ்விடத்திலேஇருக்கிறேன்; இதைத் தாங்கள் விற்றுக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுங்கள்.

புஷ்பாங்கதன்:—நீ தனியா யிருக்க என் மன மிசையவில்லை. உன்னை விட்டு யான் எவ்விதம் பிரிந்துபோவேன்? இக்காட்டில் துஷ்ட மிருகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. உன்னை யெவ்விதம் தனிமையாய் இவ்விடத்தில் விட்டுப்போகிறது?

சதாரம்:—தாங்கள் இதைப்பற்றிச் சஞ்சலப்படவேண்டாம். ஸ்திரீகளுக்கு பர்த்தாதான் தெய்வமென்று சொல்லி யிருப்பதால், தங்களுடைய நாமத்தை சதாகாலமும் உச்சரித்துக் கொண்டிருப்பேன். அதினுல் ஒரு தீங்கும் எனக்கு நேரிடாது, சீக்கிரம் போய்வாருங்கள்.

புஷ்பாங்கதன்:—நான் சீக்கிரம் வந்துவிடுவேன். பயப்படாமல் சாவதானமாய் இந்த ஆல விருக்ஷத்தின் நிழலில் இரு. நான் போய் விரைவில் வருகிறேன்.

(போகிருன்)

வி. கோபாலஐயங்கார் பி. ஏ.

நரேந்திரபுர நங்கை.

இரண்டாவது அத்தியாயம்.

சிவநேச முதலியார் தவசியாதல்.

ஒருநாள் பகல் நரேந்திரபுரத்தில் ஒருவர் தன் மனைவியைப்பார்த்து, மாணிக்கம்! நம்முடைய சங்கரனுக்கு விவாகத்துக்குத் தக்க பருவம் வந்து,

விட்டபடியால் நான் சத்தியபுரி சென்று நற்குடும்பத்தில் பெண்ணிருக்கிற தாவென்று விசாரித்து வருகிறேன்'' என்றார்.

மாணிக்கம்மாள்:—"நரேந்திரபுரத்தில் யாருமில்லையோ ?"

அவர்:—"இல்லை"

மாணிக்கம்மாள்:—"வழிக்குப் பலகாரங்கள் செய்து தரட்டுமா ?".

அவர்:—"வேண்டாம், நானதி சீக்கிரம் திரும்பிவந்து விடுவேன்".

இச்சம்பாஷணை முன்னத்தியாயத்திற் சொன்ன சம்பவம் நடப்பதற்கு முன் நடந்தது.

* * * * * * * *

நம் பார்வதியைப் படகிலேற்றி, வீட்டை நோக்கிச் சென்ற இராமனை நோக்கி இராமநாதன்:—"டேய் இராமா! நான் செய்யச்சொன்ன வேலையை செய்து முடித்தாயா ?" என வினவினன்.

இராமன்:—"நம்மெண்ணம் எளிதிற் கைக்கூடுவதற்கு யாதொரு தடையுமில்லை. நீர் சொன்ன பிரகாரம் பார்வதியை நான் தாழஞ்செடிகளடர்ந்துள்ள (ஒரு திசையைச் சுட்டிக் காண்பித்து) அக்காட்டில் வெட்டிப் புதைத்துப் போட்டேன். இனி நீர் உம்மிஷ்டப்படி திரவியஞ் சம்பாதித்துக் கொள்ளலாம்".

இராமநாதமுதலி:—"அப்படியா! நல்லவேலை செய்தாய் இராமா! உனக்குப் பின்பு சுகமுண்டு. இது முதற்கொண்டுதான் நீ எனக்கன்பான தோழன். 'வேலைக்காரன்' என்ற பெயர் அடியோடே மறைந்து போய்விட்டது. இனி நாம் அத்தியந்த நண்பராயிருக்கவேண்டும்".

இராமன்:—(அதிக கர்வத்தோடு) இராமநாதா ! பார்வதியைக் கொன்றது எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. நீ தனியா யிருக்கிறாயே, உனக்கேனிவ்வளவு சொத்து?" நண்பரே! இராமநாதமுதலி, இராமன் தன்னை அற்பமாகப் பேசுகிறானென்று அறிந்தும் அவனைக் கண்டிக்கவில்லை; ஏனெனில், தன் குடுமி இராமன் கையிலிருக்கிறதன்றோ!

இராமநாதன்:—"இராமா ! எனக்குப் பெண்சாதி—பிள்ளைகளில்லை—ஆனால்—" (சிரிக்கிறான்)

இராமன்:—" என் நகைக்கிறாய் ? ஆனால் என்ன ?" என்றான்.

இராமநாதன்:—"ஆனால் வைப்பாட்டி ஒருத்தி இருக்கிறாள். அவளிடத்தில் எனக்ககப்படும் பொருளைக் கொடுத்து நானு மவளுமாக சுகமாய் வசிக்கிறோம். முருகம்மாள் தானே உனக்குத் தெரியாதா ?"

இராமன்:—அந்த அற்ப வைப்பாட்டிக்கா கொடுத்துவிடப் போகிறாய்? நன்றாயிருக்கிறது நியாயம்! நற்குலத்திற் பிறந்து நீ இப்படிசெய்வது உனக்குத் தகுதியல்ல. அவளென்ன அவ்வளவு அழகா? நல்ல யோசனையாவது அவளுக்குண்டா?

இராமநாதன்:—" அப்படியல்ல, நீ சொல்வது முற்றிலும் பிசகு; சிவநேசனிடமிருந்து திரவியத்தை அபகரிக்க யோசனை சொன்னது அவள் தானே. அவள் சொல்லாவிட்டால் எனக்குத் தெரியுமா அவ்வித யுக்தி! அவளென்ன அவ்வளவு துஷ்டையா? நீ சொல்வதை நான் நம்பத்தக்க சாட்சி வேண்டியதில்லையா?" என்று மெல்லிய குரலோடு கேட்டான்.

இராமன்:—நானே அதற்கு சாட்சி என்கிறேனே? நீ என்ன நினைத்துக் கொண்டாலும் எனக்கென்ன? மேலும்,—,, என்று சொல்லி முடிக்கு முன்,

இராமநாதன்:—" சீ, முட்டாள்! உனக்கொன்றுந் தெரியாது. கபடில்லாதவன் நீ. நானவளிடத்திலிருந்து தானே ஐம்பது ரூபாய் உனக்கு வாங்கிக் கொடுத்தேன். நீ அவளை நல்லதனஞ் செய்துகொண்டா லல்லவோ உனக்கு நன்மை"

இராமன்:—" கூத்தியாரைப் புகழ்கின்ற இவன் சொற் கேட்டாலா நமக்கு நன்மையுண்டாகும்; இவனென்னைவிட படிப்பாளியோ * மோசக்கார படவா!" என்று நினைத்து, " எனது நன்மைக்காகவா செய்கிறாய்—அப்படியானால் மெத்த சந்தோஷம். எனக்கு எவ்வளவு கொடுப்பாய்? இக்கலியுகத்தில்—"

இராமநாதன்:—"பொருளகப்படட்டும். அகப்பட்ட பிற்பாடல்லவோ நாமிதைப் பற்றி யோசிக்கவேண்டும். "பெண்சாதி இல்லையாம் உனக்குப் பிள்ளைகளெத்தனை என்றானாம் ஒருவன்! இப்பொழுது சிவநேச முதலி இறந்துவிட்டானா உயிரோடு இருக்கிறானா? போய்ப் பார்த்துவா, இறந்துபோயிருந்தால் மிகவும் நலம். அவ்விடத்தில் உனக்கு மவனுக்கு நடக்கிற சம்பாஷணையை ஒன்றும் விடாமல் என்னிடம் வந்துசொல். நீ— இசசங்கதியை எவரிடத்திலும் வெளியிடாதே.".

இதைக்கேட்ட இராமன், இராமநாதன் வீட்டைவிட்டு வெளிப்போந்து சிவநேச முதலியார் வீடுசேர்ந்தனன். இச்சமயத்தில், சிவநேச முதலி ஒரு நாற்காலியிற் சாய்ந்து அதிக விசனப் பட்டுக்கொண் டிராநின்றனர். பொழுது புலர்ந்தது மவர் "அம்மா பார்வதி! எங்கே இருக்கிறாய்?" என்றவுடன் வருகிறபெண் பத்துக் குரலுக்கும் வராதது கண்டு, திடுக்கிட்டெழுந்து கைகால்கள் நடுக்கமுற தன்வீடு முழுவதுஞ் சுற்றிப்பார்த்தார். பட்டணமுழுவதும் ஆட்களைவிட்டுத் தேடிப்பார்த்து மவளைக்காணாமல் மனவருத்தமுற்று, யாமிரா தன் திரவியங்களை அபகரித்துக் கொள்ளச்செய்தச்

* இராமன், வேலைக்காரனா யிருந்தபோதிலும் வாசிததவன். இவன் துற்செய்கைகளே இவனை இந்த ஸ்திதிக்குக் கொண்டுவந்து விட்டதென்பதை நமது நண்பர் அறிவாராக-

சூழ்ச்சி என்று நினைத்து, "ஐயோ திரவியமே! நானேன் உன்னை அடைந்தேன். உன்னை அடைந்தது எனது கண்ணான பெண்ணைத் துறக்கவோ! ஈசா! நானளவற்ற திரவியங்களை அடைந்தும் பிரயோசனமில்லையே" என்று தலையிலடித்துக் கொள்ளப்போகுஞ் சமயத்தில் இராமனைக் கண்டு, "இராமா என்மகளைக் காணோமே! எங்கே போனாளோ தெரியவில்லையே! நீ காலையிலெழுந்து அவளை எங்கேயாவதும் பார்த்ததுண்டா? என்னருமையான ஒரு மகளையுந் துறக்கக் காலம் நேர்ந்ததே. என்மனைவி என்னகதி யானளோ, அதுவுந் தெரியவில்லை. இராமா இச்சமயத்தில் நீதானெனக் குற்றதுணை" என்று துக்கத்தோடே சொன்னார்.

இராமன்:—"பார்வதியா! நம்பார்வதி அம்மாளா! எங்கே" என்று? அதிக வருத்தப் படுபவன்போல் பாசாங்குசெய்து, நானின்று காலை நமது பார்வதி ஓர் அன்னிய மனிதனோடுப் பேசிக்கொண் டிருந்ததைப் பார்த்தேன். அப்புது மனிதன் உம்முடைய உறவினனா யிருந்தாலன்றி நம்முடைய பார்வதி அம்மாள் பேசமாட்டார்க ளென்றெண்ணி வேலையாய்ப் போய்விட்டேன். ஒருவேளை அந்தப் படுபாவிதான் அந்தம்மாளைத் தனக்குப்பெண்டாக்கிக் கொள்ள மாயவார்த்தைகள் பேசி அழைத்துக் கொண்டு போயிருப்பான்.

சிவநேசமுதலி:—"அந்த ஆளின்னானென்று நீ நன்கு அறிவாயாதலால், என் புதல்வியை யுமத்துஷ்டனையும் தேடிப்பிடித்து வந்தாலுனக்குத் தகுந்த வெகுமதி தருகிறேன் "பார்வதி இல்லாததினால் நான் கோலிழந்த குருடனானேன்."

இராமன்:—"அவர்களெங்கே போனார்களோ. இப்பொழுது என்னால் முடியாது" என்றுசொல்லி அவரை அதிக துக்கத்திற் குள்ளாக்கினான்.

சிவநேசன்:—"ஐயையோ! என்ன செய்வேன், என் சொத்துக்கள் யாவும் பயனற்றவைகளாய் விட்டனவே! நான் முற்பிறப்பி லென்னபாவஞ் செய்தேனோ, பாபநாசா? நானெப் பிறப்பில் என் மகளைக் காண்பேன்?" என்றுசொல்லி நாற்காலியிலிருந்து கீழேவிழுந்து, புரண்டார். அந்தோ? என்ன செய்வார் பாபம்!

இராமனோ இவர் விழுந்து சாகட்டு மென்கிற எண்ணத்தோடு கீழே விழுந்தவரை எடுக்காமல் உள்ளுக்குள்ளே நினைத்து, வெளிக்கு அதிக வருத்தப் படுகிறவன்போல் அழத் தொடங்கினான்; சிவநேச முதலியார் கண்கள் கொவ்வைக் கனிபோல் சிவந்தன, கைகால்கள் நடுங்கின; பிறகு, சிறிது நேரஞ் சென்றபின்பு, "இராமா? என்மகளைக் காணோமே? என்னசெய்வது? "என்றார்.

இராமன்:—"என்ன செய்வது படவேண்டிய தெல்லாம்பட்டு தானே தீரவேண்டும். ஆபத்துகாலத்தில் தைரியத்தைவிடாதீர், ஈசன் விட்டசெயல்."

சுமார் ஒருமணி நேரமாக யாதொன்றும் பேசாதிருந்த சிவநேச முதலியார்:—இராமநாத னென்ன செய்கிறான்? அவனுக்கு என் மகள் காணமற்போன செய்தி தெரியுமா? அவனொருபாவி? தன் வாழ்நாட்களை விவாகஞ்

செய்துக் கொள்ளாமல் வீணே கழித்து விடுகின்றான், என்னுடன் பிறந்தவர்களில் அவன் ஒருவன்தான் அனாதை."

இராமன்:—மேலும், அவருமை அநேக நாட்களாக நம்பிக்கொண்டிருக்கிறார். அவருமது தமையனாகப் பிறப்பதற்கு நீர் பூர்வீகத்திலென்ன புண்ணியஞ் செய்தீரோ? அண்ணன்சொல் தட்டுகிறவரன்று சாது. இப்புவியிலுள்ள எல்லாவற்றின் மீதும் அவருக்கு இரக்கமதிகமே." என்று இராமநாதனைப் புகழ்ந்து பேசினான்.

சிவநேச முதலியார்:—"இராமா எனக்கு உலகப்பற்று ஒன்றுமில்லை. ஆதலால் நானெனக்கிருக்கும் அபரிமிதமான திரவியங்களை இராமநாதனுக்குக்கொடுத்துவிட்டுத் துறவியாகலாமென்று நினைக்கிறேன்."

இராமன்:—நீர் சொன்னபடி உமது திரவியங்களை இராமநாத முதலியாருக்குக் கொடுத்து விடுவதே உத்தமம்."

சிவநேச முதலியார்:—"இராமா? என் பணப் பெட்டியின் சாவியை அந்த அறையிலோர் ஆணியில்—ஐயோ? பார்வதிதானே நேற்று அதனை அங்கு மாட்டினாள், பார்வதி? எனகண்ணே! நீ எக்கதிக் காளானாயோ? என்றுசொல்லி விசனப்பட, இராம னவரைத் தேற்றி, இதற்கெல்லாம் விசனப் படுவதிற் பிரயோசனமில்லை, நீர் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்றுசொல்லி ஆணியில் மாட்டியிருந்த சாவியைக் கொணர்ந்து அவரிடங் கொடுத்தனன்,

சிவநேச முதலியா ரதைக்கையில் வாங்கி, "இராமா, நீ இதை இராமநாதனிடத்திற் கொடுத்துவிடு நான் துறவியாய்ப் போய்விடுகிறேன்" என்று சொல்ல,

இராமன்:—"அப்படியே செய்ய சித்தமா யிருக்கிறேன்: உம்மைப் போன்ற தயாளகுண முள்ளவர்களை நானிதுவரையில் கண்டதே இல்லை? தர்மவான்" என்று முகஸ்துதி வார்த்தைகளைப்பேசி இராமநாதன் வீட்டை நோக்கிப் போகிறவழியில், "நம்ம இராமநாதனுக்கு நல்ல அதிர்ஷ்டம, வந்தாலிம்மாதிரி யல்லவோ வரவேண்டும" என்று யோசித்துக் கொண்டு போகையில் இவனுக்குண்டான மகிழ்ச்சியினால் நாமிங்கு வந்தோமென்பதும் அறியாமல் இராமநாதன் வீட்டுவாசற்படித் தடுக்கி கீழே விழ்ந்தனன்; வீழ்ந்தவன் உடம்பெல்லாந் துடைத்துக்கொண்டு, யாதோ யோசித்துக் கொண்டிருந்த, இராமநாதனிடஞ் சேர்ந்தனன்.

இவன் விழுந்தது இராமநாதனுக்குந் தெரியாது.

இராமன்:—இராமநாதா; உன்பாடு நல்ல அதிர்ஷ்டந் தான்-சிவநேசன் நான் சொன்ன ஒரு யுக்தியினால் மகிழ்ந்து தன் பணப் பெட்டியின் சாவியை என்னிடங் கொடுத்து அதி லிருக்கும் யாவற்றையும் உன்னை எடுத்துக் கொள்ளச் சொன்னான். அவன் துறவியாகி, சத்திய புரியைவிட்டு நீங்கிச் சுமார் ஒருமணி நேரமாகிறது.

இராமநாதன்:—"ஒழிந்தானா?" என்று சொல்லி நகைத்தான்.

மூன்றுமத்தியாயம்.

பார்வதி முத்தூர் சத்திரஞ் சேர்தல்.

நம் கதாநாயகியைப் படகிலேற்றினசமயத்திற் சூரியன் தலைகாட்டலானான். காட்டிலிருந்த தடாகங்களில் தாமரை புஷ்பங்கள் மலர்ந்தன. சூரியக் கிரணங்க ளந்நதித் தண்ணீரிற் பாயவே ஜலம் வெள்ளிபோல் மின்னிற்று. "ஆ! என்கதி என்னவாயிற்று ஈசா!" என்றேங்கினள் நம் கதாநாயகி.

சிறிது நேரம் பொறுத்து அந் நான்குப் படகுக்காரர் பின்வருமாறு பேசலானார்கள்.

முதற் படகுக்காரன்:—"ஆ? இந்த பொண்ணு எம்மாத்தும் அழகா இருக்குது? பேஷ் பலே சொகுசா இருக்குது"

இரண்டாம் படகுக்காரன் பார்வதியை நோக்கி:—"இங்க வந்துட்டுப் போறீங்களே அவங்க ஆரு சொல்லு? என.

பார்வதி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இதைக்கண்ட படகுக்காரன் மறுபடியும்:—இன்னேமூஞ்சே அந்தபக்கந் திருப்பிக்ரியே என்றான்.

மூன்றும் படகுக்காரன்:—உன்பேரு என்னா?" என்று பார்வதியை நோக்கி அதிக ஆச்சரியத்துடன் கேட்க,

பார்வதி பயம் நீங்கினவளாய், "என்பெயர் பார்வதி" என்று பதிலுரைத்தாள்.

ஈ. என். மரகதவேலு முதலியார்.

தர்மம்.

தர்மமானது ஓர் புண்ணியமான செய்கை. இச்செய்கையை ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்பச் செய்ய முயலல் வேண்டும். சிலர் தர்மஞ் செய்வதினால் தங்களை யுலகத்தோர் மெச்சுவார்க ளென்றும், அதனாற் தங்களுக்குப் புகழும் பெயரும் வரு மெனபதற்காகச் செய்கிறார்களே யொழியத், தருமஞ் செய்யும் விருப்பத்துடன் செய்கிறதில்லை. கன்னிகாதானஞ் செய்தலும் ஓர் சிறந்த புண்ணியம். கன்னிகாதானமாவது விவாகஞ் செய்ய வழியில்லாமல் பிள்ளைகளை நெடு நாளைக்குக் குமரராக வைத்திருபபவர் களுக்கு ஏதேனும் சொற்பபொருள் கொடுத்து விவாகஞ்செய்வித்து வைத்தலேயாம். இடிந்து கிலமாய்க் கிடக்கும் புராதன ஆலயங்களை புதிதாக்கிப், பூசை, நைவேத்தியம் முதலியன செய்வித்தலும், இன்னும் புது ஆலயங்களை யேற்படுத்தி நடப்பித்தலும் புண்ணியமே.

எத்தனையோ பள்ளிக் கூடங்கள் மூல நிதியில்லாததனாலும், அதற்குச் சரியான மானேசர் பாலிருந்து நடப்பிக்க முடியாததனாலும் அழிந்து போகின்றன. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை நல்லஸ்திதிக்குக்கொண்டுவந்தால்

எத்தனையோ பிள்ளைகள் படிக்கவுங் கூடும். காசையும்,பொருளையும், அள்ளிக கொடுத்தல் மாத்திரம் மேலான புண்ணிய மென்று சிலர் எண்ணுகின்றனர். அது தப்பு. மேற்கூறிய வைகளிலும் பார்க்க எவ்வளவோ அதிகமான தருமங்கள் சரீரத்தினற் செய்ய முடியும். கீழைத் தேசத்தவர்களே தருமஞ் செய்வதில் அதிகம் பிரீதியுள்ளவர்கள்.

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று"

என்னும் வாக்கியத்திற் கிணங்க, திருவனந்தபுரம், சென்னை, மைசூர், பம்பாய், முதலிய ராஜதானியி லிருக்கும், ராஜாக்களும்' ராணிகளும், இன்னுமுள்ள பிரபுக்களும், பஞ்சம் வருங்காலங்களிற சனங்களைக் காப்பாற்றற்காகவும், இன்னுங் கல்வி முதலிய பலவற்றிற்கு மாக, பொன், வெள்ளி முதலிய உலோகங்களையும் அள்ளிக் கொடுக்கின்றனர். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாதிருத்தல் வேண்டு மென்றும் பழமொழிக்கேற்ப "நாங்கள் செய்யுந் தருமங்களொன்றையும் பிறரறியாம லிருத்தல்வேண்டும். இங்கிலாந்து முதலிய அந்நியதேசங்களிலே எத்தனையோ பெண்மணிகள் ஆஸ்பத்திரி முதலியவைகளிலிருக்கும் நோயாளருக்கு கொஞ்சமேனும் மனவெறுப்பின்றி தங்களுடைய கைகளினலே எவ்வளவோ பரிகரிப்புகள் செய்வதுடன் அவர்களுக்கு எவ்வளவோ ஆறுதல்களுஞ் சொல்லி வருத்தத்தையுஞ் சாந்தப்படுத்துகின்றார்கள். அவைகளல்லவோ தருமம் நிறைந்த செய்கைகள். வேறு சில பெண்கள் தங்களினது நாயகர்மாரையும், வருத்தமாயிருக்கும்பொழுது பரிகரிக்க வெறுப்படைகின்றனர். தருமஞ்செய்கிறதற்குப் பொருளில்லாதவர்கள் சரீர உதவியாய்ச் செய்யலாம்.

"வறியார்க்கொன் றீவதேயீகை
மற்றெல்லாங்குறியெதிர்ப்பைநீரதுடைத்து"

என்னும் வாக்கியத்திற்கிணங்க, கூன், குருடு, செவிடு, முடம் உழைக்கச் சக்தியற்ற நோயாளர்களுக்குப் பிச்சை கொடுப்பதே தருமம். பிட்சைக் கொடுததற்குத் தகுந்தவர்களோ தகாதவர்களோவென்று தாங்களே நேரில் பார்த்துத் தருமஞ்செய்தல் மிகவும் விசேஷம். அப்படிச்செய்ய வியலாதவர்கள் தாங்கள் தருமஞ்செய்யும் பொருள்களை ஓர் தருமமடத்திற்கு அல்லது ஓர் சங்கத்திற்கு அனுப்பிவைத்தல் மிகவும் உத்தமம். அதைவிட எல்லாருககுங் கொடுத்தால் உழைக்கக் கூடியவர்கள் தானும் வேலைசெய்யாமல் சுகமாய் ஊரிலே திரிந்துவாங்கிச் சாப்பிடலாமென்று சோம்பேரிகளாய் வந்துவிடுவார்கள். அப்படித் தான் அவர்கள் திரிந்துவாங்கிச் சாப்பிட்டாலும் அவர்களினுடைய பிற்காலத்திற்கும், வருத்தம்வரும் வேளைகளிலும், சாப்பாடு மற்றவர்கள் கொடுப்பார்களா? இல்லை. அப்போது அவர்கள்யாது செய்வார்களென்றால் சாப்பாட்டுக்கும், மருந்துக்கும் வழியில்லாமல்கிடந்து உலைந்து சாவார்கள். ஆதலினல் அவர்களுக்குக கொடுத்து பொருளையும் வீணயழிப்பதுடன் மிகவும் பாபமாயுமிருககும். நாங்கள் இவ்வுலகத்தில் மாததிரம் சந்தோஷமாயிருந்து காலங்கழிகக வேண்டியதல்ல, இவ்வுலகத் தச்சீவியமும், சந்தோஷமும் ஓர் சொறபகாலத்திற்குத்தான். எங்களுடைய ஆத்மா உடம்பை விட்டுப்பிரிந்து போகும்பொழுது இவ்வுலகத்துப் பொரு

ளும, பண்டமும், காணியும்,எங்களுடன் கூடவருமா? இல்லை. பின்னையாது? தருமமாகிய ஓர் பொருளுமே என்றும் அழியாப் பொருளாய் எங்களுடைய ஆத்மாவுடன் தொடரும். ஆதலால் அத்தகைய தருமத்தையே ஒவ்வொருவரும் இடைவிடாது செய்துவர ஈசனருள்புரிவாராக

எஸ். ராஜம்மாள்.

ஸ்ரீமதி ராதாபாய்.

(சுதேசமித்திரன்)

சமீபத்தில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் பிரசங்கம் செய்த ஸ்ரீமதி ராதாபாய் என்ற ஹிந்துப் பெண்மணி கல்விகற்ற நம் சகோதரர்களுக்குப் பின் வருமாறு புத்திமதி சொன்னார். "நாம் ஒரு ஜாதியாய அமைய ஆசைகொள்ள வேண்டும். ஜாதீயம் ஒரு பெரும் சக்தி; அது உன்னதமான லக்ஷியம், அந்த லக்ஷியத்தை எட்டிப் பிடித்தல் நம் படித்த வகுப்பார் தங்கள் பொறுப்புகளை எப்படி நிர்வகிக்கிறார்களோ அதைப்பற்றி யுள்ளது." இவ்வாறு இவர்சொன்ன புத்தியதியைத் தேசாபிமானிகள் அனைவரும் கவலையுடன் மனதிற் கொள்ளக்கடவர். இந்த லக்ஷியத்தை எட்டுவதில் இரண்டு முயற்சிகள் அவசியமென்று ஸ்ரீமதி ராதாபாய் சொன்னார்.

முதலாவது முயற்சி ஸ்திரீகளைப் படிப்பித்தல். ஸ்ரீமதி ராதாபாயைப் போல் நம் சகோதரிகள் படித்தவர்களாய்த் தேசத்தின் நிலைமையையும் தேசத்தாரின் கடமையையும் முயற்சியோடு புருஷரையும், உற்சாகப் படுத்துவார்களானால், நம்தேசம் தீவிரகதியுடன் முன்னுக்குவரும். ஸ்திரீகளைப் படிப்பிக்கும் விஷயத்தில் படிப்புப்பெற்ற புருஷர் போதுமான கவலை செலுத்துவதில்லை என்றே சொல்லவேண்டும். ஐரோப்பியர் மத்தியில் பெருமையாய்ப் பேசிவிடுகிறார்கள். வீட்டில் ஸ்திரீகள் இஷ்டப்படியே நடந்து தேச நன்மைக் குற்ற புதுமைகளை அனுஷ்டிக்கப் பயப்படுகிறார்கள். பாலவிவாகம் ஒழியாம லிருக்கிறவரையில் ஸ்திரீகளுக்கு நல்ல படிப்புக் கொடுப்பது சாத்தியமாகாது. புருஷருடைய கவலைக் குறைவால் நம்ஸ்திரீகள் பொதுவாய்ப் படிப்பில்லாதவர்களா யிருந்தாலும் அங்கங்கே ஸ்ரீமதி ராதாபாயைப்போல் சில பெண்மணிகள் உயர்ந்த கல்விகற்பதில் ஆசை யுள்ளவர்களாய்க் கீர்த்தி பெற்று வருகிறார்கள். கல்விகற்ற ஸ்திரீகள் பெரும்பாலும் தேசாபிமானிகளாயும் உயர்ந்த நோக்கங்கள் உள்ளவர்களாயும் இருக்கக் காண்கிறோம். ஸ்திரீகளும் புருஷரைப்போல் படிப்பாளிக ளாகிவிட்டால், தேசத்துக்கு விளையும் நன்மைகள் ஒரு வழியிலின்றிப் பல வழிகளிலும் தோன்றும்.

ஸ்ரீமதி ராதாபாய் சொன்ன இரண்டாவது முயற்சி என்னவெனில், தீண்டாதவரென்றும் தாழ்ந்த ஜாதியாரென்றும் சொல்லப்படுகிற பஞ்சமரை உயர்த்துதல். இவர்கள் தற்காலமுள்ள நிலைமையில் இருக்கிறவரையில் இந்தியருக்குள் ஜாதிய உணர்ச்சியாவது ஜாதிய அமைப்பாவது சாத்தியமல்ல. நல்ல வேளையாய்த் தேசத்துப் பற்பல இடங்களில் இவர்களின்

நிலைமையால் நேரிட்டிருக்கும் நிந்தை ஒழியுமாறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்ரீமதி ராதாபாயின் பிதாவாகிய மிஸ்டர் கே. ரெங்கராவ், அவரது வாசஸ்தலமாகிய மங்களூரில் பஞ்சமர்களுக்கென்று ஒரு ஸ்கூலும் ஒரு நெசவுச்சாலையும் ஸ்தாபித்திருக்கிறார். இவர் பிரம்மசமாஜத்தைச் சேர்ந்தவராய்ச் சத்தமில்லாமல் பரோபகாரம் செய்துவரும் உத்தமர். இவருடைய புதல்வியாகிய இந்தப் பெண்மணி இந்த விஷயத்தைப் பற்றி நமக்குப் புத்திசொல்லப் பாத்தியமுள்ளவரென்றே சொல்லவேண்டும். இவர் பிரசிடென்ஸி காலேஜில் பி. ஏ. வுக்குப் படித்து வருவதாக அறிகிறோம். அந்தப் பரீட்சையில் தேறிப் பல்லாண்டு ஜீவித்துப் பரோபகாரம் செய்து கீர்த்திபெறப் பிரார்த்திக்கிறோம். இவருடைய பிரசங்கத்தை 'மெயில்' பத்திரிகையில் புகழ்ந்து, நம் ஸ்திரீகளின் அபிவிர்த்தியை வற்புறுத்திப் பத்திரிகைகளுக்கு எழுதிவரும் சுந்தரி லாஸரஸ் அம்மையையும் நாம் புகழ்கிறோம்.

ச ர் வ ஜி த்.

அங்கிருந்து கொண்டே காதைக்கொடுத்து கவனித்தபோது, மச்சுப்படியேறிவந்த மனிதன் ஒரு கதவை பலமாய்க் கீழேதள்ளி மச்சுப்படி வாயிலை மூடித் தாளிட்டுப் பூட்டியது காதில்கேட்டது. சிறிது நேரம் காத்திருந்து, மறுபடியும் வெளியேவந்து பார்க்க, தான் நினைத்த பிரகாரம் மச்சுவாயில் இரும்புக் கதவால் மூடிபட்டுப் பூட்டியிருந்தது. அங்கு சற்று நின்று விற்று வேறொரு பக்கஞ் செல்லுகையில், மற்றொரு மச்சுப் படிக்கட்டைக் கண்டாள். அதன்வழியாய் கீழே இறங்க அது வெட்ட வெளியில் கொண்டு போய்விட்டது. அவ்வெளியில் மலை யதிபதிகளின் ஆட்களிலனேகர் ஒன்றுகூடிப் பேசிக்கொண் டிருந்தார்கள். அக் கூட்டத்தில் சடையனும் வீரனும் இருந்தார்கள். அவளைப் பார்தததும் சடையன், "யாரம்மா இங்கு வந்தது. இந்த அம்மாளை எங்கேயோ பார்த்ததாக ஞாபக மிருக்கிறதே. ஆ, ஆ, இப்போதுதான் ஞாபகம் வருகிறது! வீரா, உன்னுடைய குதிரையை அந்தப்பையன் ஸர்வஜித் காட்டில் சுட்டுக் கொல்லவில்லையா? அப்பொழுது. இவளைப் பார்த்தேன்," என்று சொல்லிவிட்டு ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா, இக்கோட்டையில் ஸ்திரீ ஜனத்தைக் காண்பதரிது. ஆகையால் உன்னைப் பார்க்க என் மனம் களிக்கிறது. ஆயினும் நீ வயதில் இன்னும் சிறியவளாயும் கொஞ்சம் அழகுள்ளவளாயு மிருந்தால் சந்தோஷ சாகரத்தில் முழுகுவேன" என்றான். இதைக்கேட்ட வீரன் சடையன் கையைப் பற்றி யிழுத்து இரகசியமாய்ச் சொல்லுகிறான்: "தாறுமாறாய் உளராதே. அந்தஸ்திரீயின் கண்களைப் பார்த்தாயா? எப்படி ஜொலிக்கிறது தெரிகிறதா? அவள் சூனியக்காரி யென்பது விளங்கவில்லையா? அவளுக்குக கோபம்வந்தால் நம்மை ஹதஞ்செய்து விடுவாள். ஆகையால் சாக்கிரதையாய் பேசு" என்றான். அவனும் பயந்துபோய், "அமமா என்மேல் கோபியாதே, ஏதோ விளையாட்டாய்ப் பேசினேன். ஆனால் ஸர்வஜித் வீரனுடைய குதிரையைக் கொன்றபோது உன்னைப் பார்ததேனென்பது உண்மைதானே?" என்று கேட்டான. இதற்கு அவள் மறுமொழி கூறுமுன் அங்கிருந்த ஒருவன்,

"பிரபு ஸுரேந்திரனைக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட் டிருக்கிறனே அந்த ஸர்வஜித்தா?" என்று கேட்க, உடனே ஸ்திரீயானவள், "நீ என்ன சொன்னய்? நீ என்ன சொன்னுய்?" என்று கிரீச்சென்று ஓலமிட்டுக்கொண்டு நடுங்கிப்போய்க் கேட்டாள்.

"அவன் சொல்வது உண்மையே. எங்கள் தலைவரான குண்டகீலர் நேற்று சாயந்திரம் ஒரு சிநேகிதரைப் பார்க்கப் போயிருந்தபோது, காட்டில் என்னழகிய குதிரையைக்கொன்ற இந்த ஸர்வஜித்—" என்று வீரன் மேலே சொல்வதற்குள் சடையன், "உன் குதிரையைக் கொன்றல், என் குதிரையை திருப்பிக் கொடுக்க அவன் மறக்கவில்லை—" என்று சொல்லப் போக, அந்த ஸ்திரீ, "ஐயோ, இந்த அருவெசிய வார்த்தைகள் வேண்டாமே. நாராசம்போன்ற செய்தி எனது காதிற்பட்டிருக்க குதிரைகளைப் பற்றிப் பேசுகிறீர்களே. ஸுரேந்திரன் கொலையுண் டிருக்கிறன். ஸர்வஜித் அவனை கொன்றதாக குற்றஞ் சாட்டப்பட் டிருக்கிறன. பிறகு மேலே நடந்ததைச் சொல் என்றதிகாரத்துடன் கேட்க, வீரன், "நேற்று மத்தியானம் பிரபு ஸுரேந்திரன் காட்டி உலாவும்பொழுது ஸர்வஜித்தும் சிமாட்டி லீலாவதியும் தனித்துப் பிரியமாய் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டானும்."—

"ஆம் நானும் அவ்விருவர்கள் பேசிக்கொன்டு நின்றதைப் பார்த்தேன்" பிறகு பிறகு என்றுள.

"ஸுரேந்திரன் இதைப் பார்த்தபோது அடங்காக்கோபத்தை யடைந்தானும். ஏனெனில் அச்சிமாட்டியை உயர்குலத்தோனை பிரபு அநங்கருக்கு விவாஹஞ்செய்து கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறர்களாம். கண்டெடுக்கப்பட்ட பிள்ளையான ஸர்வஜித்—"

"கண்டெடுக்கப்பட்டவனு?" என்று ஒருமாதிரியாய்க் கேட்டுவிட்டு, மேலே சொல்லு, மேலே சொல்லு" என்றுள்.

"ஆம், அம்மா. ஸர்வஜித் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளையென்பது இரகசியமல்லவே. எனக்குத் தெரிந்தமட்டில், ஸர்வஜித் குழந்தையாயிருக்கும்போது அமராபுரியில் பிரபு புஷ்யமித்திரருடைய மாளிகையின் வாசற்படியில் காணப்பட்டானும்—" என்று சொல்லும்போது அவளுடைய கவனம் வேறிடத்தில் சென்றுவிட்டதாகத் தோன்றிற்று; "புஷ்யமித்திரருடைய—மாளிகையின் வாசற்படியிலா? என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். இப்படி தனக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்தவள் மயக்கங்கொண்டாற்போல் தடுமாறி கீழே சாய்ந்தாள். விழுகிறவளை சடையன் பிடித்துக்கொண்டு, "எனனம்மா உடம்பு?" என்று கேட்க, உடனே சித்த ஸ்வாதீனத்தை யடைந்த அவள் "எனக்கோர் வியாதியுண்டு. சில சமயங்களில் திடீரென்று வரும். அதுவே ஒரு சமயமில்லாவிடில் ஒரு சமயம் என்னைக்கொன்றுவிடு மென்பது திண்ணம். இப்போது சரியாய் விட்டது. உனகதையை மேலே சொல்" என்றுள். உடனே வீரன், "நான் எங்கே நிறுத்தினேன். ஆ, சரிதான் பிரபு ஸுரேந்திரன் ஸர்வஜித்தைத் திட்டி வைதானும். அதைப் பொறுக்காமல் சர்வஜித் கத்தியில் கையைப் போட்டானும். இது நடந்த சற்று நேரத்திற்கெல்லாம் மற்றெல்லாரும் அநந்தகிரிக்குத் திரும்பிச் சென்றிருக்க, ஸுரேந்திரன் மாத்திரம் திரம்பி வரவில்லையாம். கத்தியில் கைபோட்டதைத் தவிர வேறு சில காரணங்களைக்கொண்டு ஸர்வஜித்தே ஸுரேந்திரனைக் கொன்றிருக்கவேண்டுமென்று சந்தேகித்து அவனை ஒரு இருட்டறையில் அடைத்திருக்கிறர்களாம்" என்று சொன்னன். அககாரணங்கள் என்னவென்று அந்த ஸ்திரீ

வினவ, நாம் முந்தியே எழுதியிருக்கிற சங்கதிகளை வீரன் தெரிவித்தான். அவள் அவ்விடம் விட்டகன்று வேறொரு பக்கஞ்செல்லுகையில், சமையலறையில் இருவர் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் காதில் விழுந்தது. ஒருவன் மற்றவனிடத்தில், "இன்றைக்கு என்ன சமையல் செய்யலாம். மானிறைச்சியைப் பக்குவஞ்செய்யலாமா? அல்லது மீன்களைச் சமைக்கலாமா? அல்லது நேற்றுக்கொண்டுவரப்பட்ட பதிந்திருந்த ஒடிந்த கத்தியோடுகூடிய காட்டுப்பன்றியைச் சமைக்கலாமா? என்றான். மற்றவன், பன்றியைப்பற்றி நாளை யோசித்துக்கொள்வோம். அதிருக்கட்டும் கத்தியைப்பிடுங்கி யெறியாமல் ஏன் அதன் கழுத்திலேயே சிக்கவைத்திருக்கிறாய்? என்று கேட்டான். முந்திப்பேசினவன் இதோ பிடுங்கி யெறிகிறேன் என்று சொல்லி ஒரு பிடியில்லாத கத்தியை வீசி யெறிந்தான். அது அந்த ஸ்திரீயினருகில் விழுந்தது. அதை உடனே அவள் எடுத்துக்கொண்டு தன்னறை சென்றாள்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி.ஏ.

வெப்பம்.

வெந்நீர் அண்டாவை விளக்காததேன்?
குடைக்கு வெள்ளை போர்த்ததேன்?

கறுப்பு காயும், கறுப்பு காயும் என்று:—கருமை நிறம் வெப்பத்தை அதிக சீக்கிரத்தில் இழுத்துக் கொள்ளுகிறது. புது அண்டா ஒன்றிலும் பழயகரியேறிய அண்டா ஒன்றிலும் தண்ணீர் ஊற்றி இரண்டையும் ஒரே அளவாகக் காய்ச்சினால் கரியேறிய பாத்திரத்தில் உள்ள நீரே சீக்கிரத்தில் அதி - சூடுபெற்றதா யிருக்கும். இதைத் திருஷ்டாந்தமாய் எவரும் பார்க்கலாம். ஒரே அளவாய்க் காய்ச்சுவதாவது இரண்டு அடுப்பிலும் ஒரே அளவான அனல் உண்டாகும்படி செய்தலாம். கறுப்புக்கு இந்தக்குணம் இருப்பது கண்டுதான் சுத்தமா யிருப்பதில் பேர்போன நம் முன்னோர்கள் காலம் முதல் நாம் வெந்நீரண்டாவின் வெளிப் பக்கத்தைத் தேய்த்துக் கழுவி விடாமல் நாளுக்கு நாள் அதன் கரியை அதிகரித்து வருபவர்களாய் இருக்கிறோம். அண்டாவின் கறுப்பு தண்ணீரைச் சீக்கிரம் காய்ச்சுகிறதால் அதை விளக்குவதில்லை.

பின்னும் சாதாரணமாய் அண்டாக்கள் பித்தளை, தாமிரம் முதலியவற்றாலேயே செய்யப்படுகின்றனவே, அது ஏன்? பொருள்கள் வெம்மையைத் தமக்குள் பரப்பிக்கொள்வதில் வித்தியாசப் பட்டவைகளாய் இருக்கின்றன. உலோகங்கள் எல்லாமே சடுதியில் சூட்டைத் தமக்குள் பரப்பிக் கொள்பவைகளே. தாமிரம்வெகுஎளிதில்சூட்டை ஏற்றுக்கொள்ளும். கண்ணாடிவெகு சாவகாசமாய்த்தான் பரப்பிக்கொள்ளும், விறகுக் கட்டையில் இத்தன்மை இல்லையே இல்லைபோலும். திருஷ்டாந்தமாக. இரும்பு, பித்தளை இவைகளால் ஆனகரண்டியைக் கையில்பிடித்துக்கொண்டுவெகுநேரம் காய்ச்ச முடியாது, ஒரு நுனியிலிருக்கும் வெப்பத்தை அது வெகு சீக்கிரம் மற்ற நுனிக்கும் பரபபிவிடுகிறது. ஆனால் கண்ணாடியை வெகுநேரம் கையில் பிடித்துக்கொண்டு காய்ச்சலாம், விறகுக் கட்டையையோ ஒரு கோடியில் ஏற்றிய தீ, கையண்டை வெகு சமீபத்தில் எட்டும் வரைக்கும் பிடித்திருக்கலாம். சிறுவர்கள் சிலர் நெருப்புக்குச்சி முழுவதையும் பிடித்தே எரிய விடுகிறார்கள் அல்லவோ! ஜலம் உஷ்ணத்தைத் தனக்குள் வியாபிக்கச் செய்வதில்லையென்றே சொல்லலாம். வேண்டுமானால்ஒரு கண்ணாடிப் பரீக்ஷைக்குழாயில்

28 JUN 1910 MADRAS.

நிரம்பத் தண்ணீர் ஊற்றி மேல்பாகத்தை மட்டும் சாய்த்துக் காய்ச்சினால் மேலே உள்ள தண்ணீர் கொதிக்கும், கீழே உள்ள அத்தனை தண்ணீரும் முன்போல குளிர்ச்சியாகவே யிருக்கும். இப்படித் தண்ணீர் சூட்டைப் பரப்பிக் கொள்ளாததாலும், பித்தளை, வெண்கலம் பரப்பிக் கொள்வதாலும் தான உள் இருக்கும் காப்பி குடிக்கத்தக்க சூடாயிருக்கும்போதும் அது இருக்கும் பாத்திரத்தைக் கையாலும் எடுக்கமுடிவதில்லை. இதற்கும் வாயை விடக் கை அதிக சூட்டைத் தாங்குவது; கம்பளமும் தண்ணீரைப்போலவே கனலைக்கடிதில் கவராது. அது மூடிய பொருளின் சூட்டையும் சாமான்யத்தில் வெளிப்போக்காது, குளிர் காலத்தில் நாம் கம்பளத்தைப் போர்த்துக்கொள்வதும் இத்தன்மை கண்டுதான். நம் உடம்பில் உள்ள அனலைக் கம்பளம் வெளியேற விடுவதில்லை. இதனால்தான் பூமியின் குளிரான பாகங்களில் இருப்பவர்கள் கம்பள உடையே மிகுதியாக உடுக்கிறார்கள். அக் கம்பளமும் கருமையாயிருப்பது இன்னும் சுகம். பாருங்கள் கறுப்புக் கம்பளம் வெளியே உள்ள உஷ்ணத்தை கறுப்பால் இழுத்துக் கவர்ந்து கொள்ளுகிறது, நம் உடம்பில் உள்ள அனலை வெளியேற வொட்டாமல் காக்கிறது. இதனால்தான் இங்கிலீஷ்க்காரர் தம் தேசக் குளிருக்காகக் கறுப்புக் கம்பள உடை தரித்துக்கொள்கிறார்கள்.

ஆனால் அவர்கள் நம் சீமையில் அப்படியே தங்கள் வழக்கத்தை விடாதிருப்பது சரியாகாது. ஆனால் என்ன! வழக்கம் பெரிது? அப்பா! நம்மவர்களில் சிலர் இவ்வளவு உஷ்ணமான தேசத்திலும் இங்கிலீஷ் காரரைப் போல் நாகரீகமென்று மயங்கி கறுப்புக் கம்பளச்சட்டை தரிப்பது அதிலும் வெட்கக் கேடானது, அவர்களுக்குத்தான் வழக்கம். நம்ம நல்லவழக்கத்தை என் அம்மா கைவிடவேண்டும்! நம்ம தேசத்துக்கு அடுத்தது மெல்லிய வெள்ளைத் துணிதான்.

இப்படி உஷ்ணத்திற்கு உதவும் துணி வெள்ளை யாதலால் குடைக்கு வெள்ளை உறை போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சாதாரணமாய், குடைத்துணி கறுப்பே, கறுப்போ கனலைக் கடிது கவர்வது, நாம் குடை பிடிப்பது வெயிலுக்காக. ஆதலால் வெயிலை கொஞ்சமும் இழுக்காததும், பின்னும் வெயிலை பிரதிபலிக்கவும் சிதறடிக்கவும் செய்யும். வெள்ளை ததுணி குடைக்குமேல் போட்டால்தான் சூரியவெப்பம் நம் தலைக்குத் தாங்காது, குடை கருமை நிறத் துணியானால் தலையை நன்றாய்க் காயும். இப்படியே நமக்குச் சட்டையும் வெள்ளையாய்த்தான் இருக்கவேண்டும், நம்மவர்களின பெரிய வெள்ளைத் தலைப்பாகை இப்போது எவ்வளவு நல்லது பாருங்கள், குடியானவன் சதாவெயிலில் வேலை செய்பவன் தலையில் பெரிய வெள்ளைத் தலைப்பாகை வைத்திருப்பது எவ்வளவு புத்திசாலித் தனமானது? இங்கிலீஷ் படித்தோம என்று தலை நிறையக் குடுமி வைத்துக்கொண்டு—அது வேம்போதும் கறுப்புமயிர் வெப்பத்தை இழுத்து நம்மூளையை உருக்க—அதன்மேல் கறுப்புக் குல்லாய் வைத்துக் கொள்வது எத்தனை விவேகங் கெட்டது? நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள வழக்கங்களை யெல்லாம் ஒரு மிக்க, கெட்டதெனத் தள்ளிவிடுவது நல்லதாகாது. எப்போதும் எதையும காரணகாரியங்களை நனறாய் யூகித்தறிந்து சோதித்துப் பின்பே வழக்கத்தைக் கைவிடவோ, கைக்கொள்ளவோ வேண்டும். அப்போது எதுவும் நமக்கு நன்மையாக முடியும், அல்லாவிட்டால் அலைய வேண்டியதுதான்.

கோவை. வி. சிதம்பர வுபாத்தியாயர்.

சமாசாரக்குறிப்பு.

'சாரதா' என்னும் மாதாந்தர மலையாளப் பத்திரிகையை நடத்திவரும் ஸ்ரீமதி. கல்லியாணி அம்மாள், இங்கிலாந்தில் 'ராயல் ஆசியா சொஸைட்டி'க்கு மெம்பராகி யிருப்பதாகக்கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். இந்த அம்மாள் குழந்தைகளுக்காகச் சிறு புஸ்தகங்கள் அனேகம் எழுதி யிருப்பதுடன், 'மகாராணி விக்டோரியா'வின் ஜீவிய சரிதமொன்று வெகு நேர்த்தியாக எழுதி யிருப்பதாகத் தெரிகிறது.

எகருகொழுத்து சீழ் பிடித்தல்:—சில பேர்களுக்கு எகரு கொழுத்து அடிக்கடி பொறுக்கப்படாமல் வலிக்கும். அந்தச் சமயங்களில் எகரு சீழ்ப்பிடித்தும் இருக்கும். இதனால் உண்டாகும் வலியை ஒரு நொடியில் தீர்த்து விடலாம். ஒரு பப்பாளிக்காயைக் கொண்டுவந்து அதை ஒரு பெரிய ஊசி அல்லது கத்தியால் குத்தினால் அதிலிருந்து பால் வடியும். அந்தப்பாலில் கொஞ்சம் பஞ்சை சதும்ப நனைத்து அந்தப்பஞ்சைக்கொண்டு மெள்ள சீழ்ப்பிடித்த இடத்தில் தேய்த்தால் இரண்டு நிமிஷத்தில் புண் உடைந்துவிடுமாம்.

வெங்காயமும் காது வலியும்:—குளிரினால் சில பேர்களுக்குக் காதுவலியுண்டாகும். இப்படிக் காதுவலித்தால் ஒரு பெரிய வெங்காயத்தை எடுத்து அடுப்பில் போட்டுச்சுட்டு அதைக் காதில் சுடச்சுட வைத்துக்கட்டவேணும். இப்படிச்சுடச்சுட வைத்துக்கட்டினால் வலி சீக்கிரம் போய்விடும். சில வேளைகளில் காதிலுள்ள குருமபை உருகி வெளியேவரும். இப்படி ஆகும் பக்ஷத்தில் வெதுவெதுப்பான வெந்நீரைக் காதில் பீச்சாங் குழலை வைத்து அடிக்கவேணும். மறுபடியும் குளிரினால் வலிக்காமலிருக்கும்படி காதில் கொஞ்சம் பஞ்சை அடைத்து வைக்கவேணும்.

பரோடா சமஸ்தானத்தில் 1906௵ வரையிலும் இருந்த பள்ளிக்கூடங்கள் 688, 1907௵ 1267 பள்ளிக் கூடங்கள் ஆகிவிட்டன. இந்த சமஸ்தானத்தில் ஆண் பிள்ளைகள் 12-வயது வரையிலும், பெண் பிள்ளைகள் 10-வயது வரையிலும் படித்தே தீரவேண்டும். தேக ஆரோக்கியத்தைப் பற்றியும், சுகவழி முறைகளைப் பற்றியும் போதிப்பதற்காக பரோடா மகாராஜா தனியாகச சில உபந்நியாசகர்களை நியமித்திருக்கிறார். இதைத்தவிர மாணாக்கர்களை வெளி நாடுகளுக்கு அழைத்துப்போய் இயற்கைப் பாடங்களைப் போதிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

இங்கியில்லாமல் அச்சிடுவதற்கு ஒரு யுக்திகண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக 'சேம்பர்ஸ்' பத்திரிகையால் அறிகிறோம். அணிமாதி அஷ்டசித்திகளும் நமது நாளில் 'வைத்தியுதம்' என்னும் மின்சாரத்தினால் கிடைப்பதனால், இது ஒரு அதிசயமல்ல. இத்தனை நாள் இது உண்டாகாமலிருந்ததுதான் அதிசயம். மின்சாரக் கம்பிகளைப் பாரத்துடன் சேர்த்து, ஒரு நொடியில் கறுப்பிலோ, வேறு வர்ணத்திலோ வேண்டியபடி அச்சிட்டுவிடலாம். செலவும், சிரமமும் சுருங்கும். வருணங்கள் பலசேர்ந்து ஒரே பக்கத்தில் அச்சிடுவது இப்போது வெகு கஷ்ட சாத்தியம். அது விஷயத்தில் தான் இந்த உபாயம் வெகு உபகாரமாக விருக்கும்.